டாக்டர் கே. சௌரிராஜன்: ஆகவே தோல் தயாரிப்பாளர்களுக்கு உதவி செய்கின்ற வகையில், இந்த மிஷனரி காஸ்ட் அதிகமாக இருப்பதால், அரசாங்கமே தாமாக முன்வந்து டிஸ்போசல் ஆஃப் எப்ளுயன்ஸ் செய்ய ஏதாவது திட்டம் இருக்கிறதா? பொல்யூஷன் கன்ட்ரோல் டிபார்ட்மெண்டிலிருந்தாவது இந்த உதவியைச் செய்துகொடுத்து, சிறு உற்பத்தியாளர்களுக்கு உதவி செய்து கொடுக்க ஏதாவது திட்டம் இருக்கிறதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக்கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லை.

தமிழ்நாட்டில் முசுக்கொட்டை செடி பயிரிடப்பட்டுள்ள நிலத்தின் பரப்பளவு

*40 வினாஎண் 18037—திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு ஊரகத்தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் பட்டு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் பட்டுசெடி நடவு செய்துள்ள நிலத்தின் பரப்பளவு எவ்வளவு?

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம்: தமிழ்நாட்டில் 55042 ஏக்கர் பரப்பளவில் முசுக்கொட்டைச் செடி பயிரிடப்பட்டுள்ளது.

திரு. த. வேணுகோபால்: தலைவரவர்களே, எந்த எந்த மாவட்டத்தில் முசுக்கொட்டைச்செடி வளர்ப்புத் திட்டம் செயல்படுகிறது? அதற்காக ஏதாவது ஊக்கத் தொகை அல்லது உதவித் தொகை அரசால் அளிக்கப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம்: தலைவரவர்களே, எந்த எந்த மாவட்டத்தில் இத்திட்டம் செயல்படுகிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். பட்டியல் நீளமாக இருப்பதால் அந்தப் பட்டியல் பின்னர் அவையில் வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. த. வேணுகோபால்: தலைவரவர்களே, இந்தத் திட்டத்தினால் தமிழ்நாட்டில் எந்த அளவுக்கு உற்பத்தி அதிகரித்துள்ளது? இத்திட்டத்தினால் ஏற்றுமதி செய்யும் அளவுக்கு வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறதா? இதற்காக அரசு ஏதாவது உதவி அளித்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம்: தலைவரவர்களே, 1983-84-ல் மேலும் 8,000 ஏக்கரில் முசுக்கொட்டைச் செடியை வளர்க்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. புதிதாக முசுக்கொட்டைச் செடியை வளர்க்க முன்வரும் விவசாயிகளுக்கு விதைக் குச்சி வழங்க மானியம், 4,800 விவசாயிகளுக்கு 3 மாதங்களுக்கு பயிற்சி அளிக்கவும் பயிற்சி காலத்தில் மாதம் 150 ரூபாய் வீதம் உதவித் தொகை வழங்க மானியம், தளவாட சாமான்கள் வழங்க மானியம், 2,400 விவசாயிகளுக்கு பட்டுப்

புழு வளர்ப்புக் கூடம் கட்ட மானியம் ஆகியவைகளுக்காக 81.80 இலட்சம் ரூபாய் 1983–84 ஆம் ஆண்டில் 'பகுதி இரண்டு' திட்டத்தின்கீழ் ஒதுக்கிட அரசு உத்தேசித்துள்ளது.

திரு. இல. பலராமன் : தலைவரவர்களே, இந்த பட்டு வளர்ப்புத் தொழில் சிறு விவசாயிகளுக்கு இலாபகரமாக இருக்கிறது என்று கருதப்படுவதால் அதை ஊக்கப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கப்படுமா? உற்பத்தியாளர்களுக்கு போதுமான அளவுக்கு கூடுதல் வழங்கப்பட வேண்டும். மேலும் உற்பத்தியாளர்களுக்கு வடாற்காடு மாவட்டத்தில் வாணியம்பாடியில் பணம் வழங்குகிறார்கள். அவர்கள் பணம் வழங்க காலதாமதம் ஏற்படுகிறது. பணம் வழங்குவதில் காலதாமதம் ஏற்படாமல் இருக்க, 'பர்ச்சஸ் செண்டரில்' உடனடியாக பணம் வழங்க வேண்டுமென்று அறிவுரை வழங்கப்படுமா? இத்தொழிலை ஊக்குவிக்க என்ன என்ன திட்டங்களை வைத்திருக்கிறார்கள்? உற்பத்திப் பொருள்களை இன்றைக்கு மைசூர் போன்ற பிற மாநிலங்களுக்கு எடுத்துச்செல்லுகின்ற நிலைமை இருக்கிறது. அப்படிப்பட்ட நிலைமை இல்லாமல் இங்கேயே அவற்றைப் பயன்படுத்த வேண்டிய முயற்சிகள் மேற்கொள்ளப்படுமா?

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் : தலைவரவர்களே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனையை அரசு பரிசீலிக்கும். தற்போது மைசூருக்கு செல்லாமல் தமிழ்நாட்டிலேயே அவற்றைப் பயன்படுத்துவதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

அடை மழையினால் ஏற்பட்டுள்ள சேதம் குறித்து வெள்ளை அறிக்கை அளித்தல்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, கடந்த மாதம் தமிழ்நாட்டில் பெய்த மழையின் காரணமாக தஞ்சை, திருச்சி, புதுக்கோட்டை மாவட்டங்களில் கடுமையான பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. உயிர் இழப்பு ஏற்பட்டிருக்கிறது; ஆடுமாடுகள் இறந்திருக்கின்றன; வீடுகள் இடிந்துள்ளன. நிவாரணப் பணிகள் சரியாக நடைபெறவில்லை. ஆகவே என்ன சேதம் ஏற்பட்டது, அதற்கு என்ன செய்யப்படுகிறது என்பது குறித்து அரசுத் தரப்பில் ஒரு வெள்ளை அறிக்கை வைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.